NOOLAHAM
FOUNDATION

# Setup Eastern Unit for Noolaham Foundation

## Project Report

## 2019

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | நூலகம் நிறுவனத்தின் கிழக்கு பிராந்தியத்திற்கான அலகின் ஒழுங்கமைப்பு செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0008 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2019 ஆகஸ்ட் – 2020 யூன் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | பிரசாத் சொக்கலிங்கம், சஞ்சயன் செல்வமாணிக்கம், கோபிநாத் தில்லைநாதன், நூலக நிறுவனம்<br>மட்டக்களப்பு மாநகர சபை |

**நூலக நிறுவனம்**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

**செயற்றிட்டச் சுருக்கம்**

நூலக நிறுவனத்தின் கிழக்கு பிராந்திய செயற்பாடுகளுக்கான கேந்திர நிலையம் ஒன்றை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவுதல். அதனுடாக மட்டக்களப்பு மாவட்டதின் ஆவணங்களையும், முக்கிய செயற்பாடுகளையும் ஆவணப்படுத்தல்.

**அறிமுகமும் பின்புலமும்**

நூலக நிறுவனத்தின் கொள்கைகளோடு இசைந்த செயற்பாட்டுப் பன்மைத்துவம் மற்றும் ஆக்கப்பல்வகைமை ஆகியவற்றை அடைவதில் கிழக்கு சார்ந்த ஆக்கங்களின் ஆவணப்படுத்தல் முக்கியத்துவம் மிக்கதாகும். இந்த வகையில் கிழக்கின் கல்விச் சமுகத்தை தன்னிணைத்துக் கொண்டு அங்கு எற்கனவே உள்ள அறிவுச் சேகரத்தில் ஆவணங்களை எண்ணிமப்படுத்துதல் முக்கியமிக்கதாகவும் அடைவுச் ச்செறிவுள்ளதாகவும் இருக்கும். இந்தப்பின்புலத்தில் நூலக நிறுவனத்தின் ஆவணமாக்கல் செயற்பாடுகள் இலங்கையில் சகல பாகங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் அதன் அடைவை அதிகரிப்பதற்கும், யாழ் அலுலகத்தில் இருந்து தூரம் இடைவெளி போன்ற பல நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களை குறைப்பதற்கும், பிராந்திய ரூதியில் இயங்கு நிலை அலுவலகங்களை நிறுவி அதனூடாக செயற்பாடுகளை இலகுபடுத்தல்.

2012 காலப் பகுதில் நூலக செயற்பாடுகளை கிழக்கு பிராந்தியத்தில் விஸ்தரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அது தொடர்ந்து செல்லப்படவில்லை, பின்னர் 2016 இல் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு ஆரையம்பதி பொதுநூலகத்தில் ஓர் இடவசதியினை ஏற்பாடு செய்த போதிலும் அன்றைய சூழலில் கிழக்குப் பல்கலைகழகத்தில் ஓர் எண்ணிமப்படுத்தும் அலகினை நிறுவது உடனடியாக சாத்தியமாக 2017 இல் அங்கு எண்ணிமப்படுத்தும் அலகு நிறுவப்பட்டது. எனினும் சில மாதங்களில் அவ் அலகும் குறித்த செயற்பாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து 2017 தொடக்கம் கிழக்கில் ஊர் ஆவணப்படுத்தல், தொழிற்கலைகள் ஆவணப்படுத்தல் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட போது பிராந்திய நிலையம் ஒன்றுக்கான உடனடித்தேவை

உணரப்பட்டது. இதனை நோக்கமாகக் கொண்டு மட்டக்களப்பில் நூலக நிறுவன பிராந்திய நிலையமொன்றை நிறுவுவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## இலக்குகளும் நோக்கங்களும்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் சமூகங்களில் காணப்படுகின்ற ஆவணங்களை சேகரித்து எண்ணிமப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு கிழக்கு பிராந்தியத்தில் செயற்பாட்டு விரிவாக்கத்திற்காக அலுவலகம் ஒன்றை நிறுவுதலை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## செயற்பாடுகள்

- மட்டக்களப்பில் பொது நூலகம் ஒன்று சார்ந்து இடத்தினை தெரிவு செய்தல்.
- பொதுநூலகம் சாந்து இடத்தின பெற்றுக்கொள்ள மாநகர முதல்வரை அணுகுதல்
- இடத்தை நல்கை அடிப்படையில் பெற்றுக்கொள்ள முறையான மாநகர சபையின் அனுமதிக்காக ஆணையாளர், கௌரவ உறுப்பினர்களை போன்றவர்களுடன் உரையாடல் மற்றும் அவர்களுக்கான விளக்கத்தை கொடுத்தல்
- இடத்தினை பெற்றுகொள்வதற்கான ஒப்பந்த்த்தினை செய்வதற்குரிய அலுவலக நடவடிக்கைகள்
- இடத்தை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தினை மேற்கொள்ளல்
- மட்டக்களப்பு பொது நூலகத்தின் ஆவணங்களை எண்ணிமப்டுத்துவதற்கான அனுமதி
- இடத்தினை பொறுப்பேற்றல்
- இடத்தினை அலுவலகமா மாற்றுதல்
- அலுவலகத்திற்கு தேவையான தளபாடம் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்தல்
- அலுலகங்களுக்கு அலுவலகர்களை இணைத்துக்கொள்ளல்
- இணைக்கபட்ட அலுவலகர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் அலுவலக நடைமுறை பயிற்சிகளை வழங்கல்
- அலுவலகத்தின் சுகாதார நடைமுறைகளை பேண வழிவகுத்தல்
- அலுவலகதின் நோக்கம் மற்றும் நூலக நிறுவனத்தின் நோக்கங்களை சமூகமயப்படுத்தல்
- அலுவக இயங்கு நிலையின் சீர்தன்மையை கண்காணித்தல்

## அடைவுகள்

- மட்டக்களப்பு பொது நூலகத்தின் ஆவணங்களை எண்ணிமப்படுத்தத் தொடங்கியமை.
- மட்டக்களப்பு அலுவலகத்தை நிறுவியமை
- ஆவணப்படுத்தல் சார்த்த வேலைத்திட்டங்களை மேற்கொண்டமை
- எண்ணிமப்படுத்தலை மேற்கொள்வதற்கான தொடர்புகள் கிடைத்தமை
- கிழக்கு மாகாணத்தின் ஆளுமைகளை கன்டறியவும் ஆவணப்படுத்தவும் தொடங்கியமை.
- முஸ்லிம் ஆவணகம் தொடர்பான செயற்றிட்டத்தை முன்னொடுக்க முடிகின்றமை.

## எதிர்கொண்ட சவால்கள்

- நூலகம் நிறுவனத்தின் பணிகள் சம்பந்தமான தெளிவு சமூகத்தில் இல்லை
- நூலகம்நிறுவனத்தின் பிரதிநிதியாக மாநகர சபையுடன் அணுகுதற்கான உத்தியோக ரிதியிலான அனுமதி நூலக நிறுவனத்தால் வழங்குவதில் இருந்த தாமதம்.
- அரச அலுவலகம் ஒன்றில் காணப்படும் வேலைகள் பல்வேறு படிநிலைகளைத்தாண்டி மேற்கொள்ளப்பட வேடியுள்ளமையால் ஒப்பந்தத்தினை உரிய நேரத்திற்கு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டமை.

- தொடங்குவதற்காக திட்டமிடப்பட்ட காலத்தில் முக்கிய பங்குதாரரான பிரசாத் அவர்களின் தந்தை காலமானதால் தாமதித்து தொடங்கியமை.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- எண்ணிமப்படுத்திய ஆவணங்களை நூலகம் கோரியிருந்தது ஒரு பிரதி மாத்திரம் இருந்தமையால் அதனை வழங்க முடியாமை.
- ஊழியர் பற்றாக்குறை இருந்தமையால் வினைத்திறனான அடைவைப் பெற முடியாமை எதிர்காலத்தில் அனுபவப் புலம் மிக்க ஊழியர்களை இணைத்தல்
- நூலகம் நிறுவனம் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகளை சமூகமட்டத்தில் அதிகமாக பரவலடையச் செய்தல்.